**செய்தி வெளியீடு எண்:393** **நாள்: 24.06.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.6.2017) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டத்தில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 15 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 25 கோடியே 12 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள் மற்றும் நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ் புன்னைப் புதுப்பாளையம், முனுகப்பட்டு மற்றும் பெரியகோளாப்பாடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 5 கோடியே 26 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், பல்வேறு மாவட்டங்களில் 421 கோடியே 45 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழகத்திலுள்ள அனைத்து மாணவ மாணவியரும் கல்வியில் சிறந்து விளங்கிடவும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்திடவும், கட்டணமில்லா கல்வி, விலையில்லா பேருந்து பயண அட்டைகள், மிதி வண்டிகள், சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள், கல்வி உபகரணப் பொருட்கள், காலணிகள், இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகை வழங்குதல், பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டம், முத்தனூர், துரிஞ்சிக்குப்பம், பாச்சல், சி.எம். புதூர், தூசி, மலமஞ்சனூர் புதூர், வழுதலங்குணம், கீக்களூர், ஹரிஹரன் நகர், வேலப்பாடி, கரிமலைப்பாடி, காழியூர், புதூர் செங்கம், தண்டரை, வேடியப்பனூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 15 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 25 கோடியே 12 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள் மற்றும் நபார்டு கடனுதவி

திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டம், புன்னைப் புதுப்பாளையம், முனுகப்பட்டு மற்றும் பெரியகோளாப்பாடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 3 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 5 கோடியே 26 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, சேலம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாமக்கல், நாகப்பட்டினம், திருப்பூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 346 கோடியே 14 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 205 பள்ளிக் கட்டடங்கள்;

நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ் திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், நாமக்கல், நாகப்பட்டினம், திருப்பூர், அரியலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 49 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 74 கோடியே 52 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர்;

கரூர் மாவட்டம், கடவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 77 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 வகுப்பறைக் கட்டடம், ஆய்வகக் கட்டடம், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர்;

என மொத்தம் **451** கோடியே **83** லட்சத்து **86** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **273** பள்ளிக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ஆர். இளங்கோவன், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 24.6.2017**